## திரைப்படக் கலைஞர்கள் மற்றும் திரைப்படத் தொழில்நுட்பவியலாளர்களுக்கான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பு - 2014

திரைப்படக் கலைஞர்கள் மற்றும் திரைப்படத் தொழில்நுட்பவியலாளர்களுக்கான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான வருமான செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1986 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க திரைப்படக் கலைஞர்கள் மற்றும் திரைப்படத் தொழில்நுட்பவியலாளர்களுக்கான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பு அதிகாரச்சட்டத்தின் 11(4) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறித்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்தரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அல்லாத நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நம்பிக்கைப் பொறுப்பின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நம்பிக்கைப் பொறுப்பின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னாள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

### 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களின் மூலம் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரைப்படக் கலைஞர்கள் மற்றும் திரைப்படத் தொழில்நுட்பவியலாளர்களுக்கான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பின் நிதிசார் நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை கீழே காணப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1986 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க திரைப்படக் கலைஞர்கள் மற்றும் திரைப்படத் தொழில்நுட்பவியலாளர் களுக்கான தேசிய திரைப்பட நம்பிக்கைப் பொறுப்பு | |
| i. 3 ஆம் பந்தி :- | நம்பிக்கைப் பொறுப்பின் நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாட்டிற்காக பொறுப்பு சபையொன்று நியமிக்கப்பட வேண்டிய போதிலும், 2013 ஆம் ஆண்டிலிருந்து பொறுப்பு சபையொன்று நியமிக்கப்பட்டிருக்கவில்லை. |
| ii. 11 (3) ஆம் பந்தி :- | வருமான, செலவினக் கணக்கிலும் ஐந்தொகையிலும் கையொப்பமிடுவதற்காக சபையினால் நிறைவேற்றப்பட்ட முன்மொழிவொன்று மூலம் அதிகாரமளிக்கப்பட்ட சபையின் அங்கத்தவர்கள் இருவர் நியமிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு நியமிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2002 யூன் 12 ஆந் திகதிய பீஎவ்/பீஈ/09 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | ரூபா 400,000 நிலையான வைப்பு முதலீட்டிற்கான திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பின் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 370,784 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கெதிரான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 579,972 ஆக இருந்தமையால் நிதி விளைவுகளில் ரூபா 950,756 ஆன வீழ்ச்சியொன்று தென்பட்டது. ஏனைய வருமானம் குறைவடைந்தமை மற்றும் தாபன நிர்வாகச் செலவினம் அதிகரித்தமை இவ்வீழ்ச்சிக்கு காரணமாக இருந்தன.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நம்பிக்கைப் பொறுப்பின் பெறுவனவுகளிலிருந்து 85 சதவீதம் முதலீட்டு வட்டி வருமானத்தையே பிரதிநிதித்துவப்படுத்துவதுடன், அதன் வட்டி வீதமும் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக இவ்வாண்டில் 12.5 சதவீதத்திலிருந்து 7.5 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது. இந்நிலைமை நம்பிக்கைப் பொறுப்பின் செயலாற்பாட்டிற்காக பாதகமாக தாக்கமளிக்க கூடுமென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1998 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரையான 16 ஆண்டுகளின் போது திரைப்படக் கலைஞர்கள் மற்றும் திரைப்படத் தொழில்நுட்பவியலாளர்களின் பொருட்டு ஓய்வூதியம், மருத்துவ உதவி, மரணச் சடங்குகளுக்கான உதவி என மொத்தம் ரூபா 21,477,980 வழங்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டில் 63 ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூபா 2,000 வீதம் ஓய்வூதியமாக ரூபா 1,506,000 தொகையும் மரணித்த, ஓய்வு பெற்ற ஒருவருக்காக மரண உதவியாக ரூபா 10,000 உமாக ரூபா 1,516,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

### 4.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

#### 4.2.1 அதிகாரச்சட்டத்தின் நோக்கத்தை நிறைவேறாமை

அதிகாரச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழான பின்வரும் நோக்கங்கள் 2014 ஆம் ஆண்டிலும் அடையப் பெற்றிருக்கவில்லை.

(i) திரைப்படக் கலைஞர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்களுக்கு உதவி அளிக்கும் முகமாக நலனோம்பல் நிதியம், சேமிப்பு நிதியம், சேமிப்பு அல்லது சிக்கன சங்கங்கள் மற்றும் ஏனைய சமமான உத்தேச திட்டங்களை செயற்படுத்துதல்.

(ii) திரைப்படக் கலைஞர்கள் அல்லது தொழில்நுட்பவியலாளர்களுக்கு 60 வயது பூர்த்தியானதும் கடன், படி, வீட்டு வசதி அல்லது பிற சமமான நலன்களை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை திட்டமிடல்.

#### 4.2.2 நடைமுறைப்படுத்தப்படாத நம்பிக்கைப் பொறுப்பின் சபைத் தீர்மானங்கள்

நம்பிக்கைப் பொறுப்பிடமிருந்த நிலையான வைப்புகளின் மூலம் பெறப்படும் வருடாந்த வட்டி மற்றும் திரைப்படக் கூட்டுத்தாபனத்திடமிருந்து நம்பிக்கைப் பொறுப்புக்கு மானியமாக வழங்கிய ரூபா 200,000 தொகையில் ஓய்வூதியக்காரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுவதுடன், நம்பிக்கைப் பொறுப்பின் நிதிசார் நிலைமையை மேலும் முன்னேற்றுவதற்கு 2004 செப்தெம்பர் 21 ஆந் திகதி நடைபெற்ற 79 ஆம் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய தீர்மானங்கள் 2014 ஆம் ஆண்டு வரை நடைமுறைப்படுத்தப்படாதிருந்தன.

### 4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஆம் ஆண்டில் சனவரி முதல் கொடுப்பனவு செய்யப்பட்ட தெரிவுசெய்யப்பட்ட முறை குறிப்பாக வெளியிடப்படாத 15 புதிய ஓய்வூதியம் பெறும் கலைஞர்களுக்கு ஒருவருக்கு மாதாந்தம் ரூபா 2,000 வீதம் மொத்தம் ரூபா 360,000 கூட்டுத்தொகை பொறுப்புச் சபையின் அங்கீகாரமின்றி செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) நம்பிக்கைப் பொறுப்பின் கடமைகள் திரைப்படக் கூட்டுத்தாபன தலைவர் மற்றும் சபையின் பெயர் கூறிய உத்தியோகத்தர்களால் நிறைவேற்றப்பட்டிருந்ததுடன், கடமைகளை மேவுகை செய்வதற்காக வருடாந்தம் ரூபா 64,800 தொகை சபையின் அங்கீகாரமின்றி செலுத்தப்பட்டிருந்தது.

## 4.4 விளைவற்ற நிதியம்

ருக்மணிதேவி ஞாபகார்த்த நிதியத்தின் ரூபா 462,778 தொகை பயன்படுத்தப்பட்டு பாடகர் ஒருவர் இந்தியாவில் ''பூனா'' திரைப்பட நிறுவனத்தில் பட்டப்பின்படிப்பை மேற்கொள்வதற்குப் முன்மொழியப்பட்ட புலமைப்பரிசில் முறை 1986 ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப்படாதிருந்தது.

## 5. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

## 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

நம்பிக்கைப் பொறுப்பு பாராளுமன்ற அதிகாரச்சட்டமொன்றின் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட சுயாதீன நிறுவனமொன்றாக இருந்த போதிலும் மீளாய்வாண்டிற்காக றம்பான செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.2 தீர்த்துவைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

1986 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க திரைப்படக் கலைஞர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்களுக்கான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பு அதிகாரச்சட்டத்தின் 5 ஆம் பிரிவில் சுட்டிக்காட்டப்பட்ட பணிகளை அமுலாக்குவதற்கு கடைப்பிடிக்க வேண்டிய விதிக்கோவையின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தை முன்னேற்றுவதன் பொருட்டு மாதாந்தம் செலுத்தக் கூடிய தொகையை மாத்திரம் வைத்துக்கொண்டு எஞ்சிய தொகையை ஆக்கபூர்வமான முதலீடுகளில் பயன்படுத்த வேண்டிய போதிலும், மாதமொன்றிற்கு சராசரியாக ரூபா 800,000 முதல் ரூபா 1,000,000 வரையான மிகை நிதி அளவொன்று முறையாக முதலீடு செய்யப்படாமல் வங்கி நடைமுறைக் கணக்கொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் உள்ள குறைபாடுகள் அவ்வப்போது நம்பிக்கைப் பொறுப்பின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) முதலீடுகள்
(இ) ஒய்வூதியக் கொடுப்பனவு